# ஆக்கப் பெயர்கள்

## ஆக்க பெயர்கள்

பெயர் அல்லது வினைச்சொற்களுடன் விகுதிகளை சேர்த்து, ஆக்கப்படும் பெயர்ச்சொற்கள் (DERIVATIVE NOUN) எனப்படும். இவ்வாறு பெயர் சொற்களை ஆக்க பயன்படும் விகுதிகள் ஆக்கப் பெயர் விகுதிகள் எனப்படும்.

**தமிழில் உள்ள ஆக்க பெயர் விகுதிகள்:**

காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர், மானம் போன்ற ஆக்க பெயர் சொற்களை ஈற்றில் நிற்கும் விகுதிகளைக் கொண்டு மூவகையாகப் பிரிக்கலாம். அவை,

- பெயருடன் சேரும் விகுதிகள்
- வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்
- பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்

| சொற்கள் | ஆக்கப் பெயர் விகுதிகள் |
|---|---|
| அறிவியல் | இயல் |
| கோழைத்தனம் | தனம் |
| சமத்துவம் | துவம் |
| பெண்ணியம் | இயம் |
| பேச்சாளன் | ஆளன் |
| ஏற்றுமதி | மதி |

### 1. பெயருடன் சேரும் விகுதிகள்

(காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆழி, தாரர்)

காரன், காரி, காரர், ஆகிய ஆக்க பெயர் விகுதிகள் உடைமை, உரிமை, உறவு அல்லது தொடர்பு, தொழில் அல்லது ஆளுதல் என்னும் நான்கு பொருள்களில் வரும்.

வீடு + காரன் - வீட்டுக்காரன் ➡ உடைமை

தமிழ்நாடு + காரி - தமிழ்நாட்டுக்காரி ➡ உரிமை

உறவு + காரர் - உறவுக்காரர் ➡ உறவு

தோட்டம் + காரர் - தோட்டக்காரர் ➡ தொழில்

### 2. தொழிற்பெயர் விகுதிகள்

ஆளர் என்னும் ஆக்கப்பெயர் விகுதி சேர்ந்து சொற்கள் உருவாகின்றன. ஆளர் என்னும் விகுதி உயர்நிலை பணிபுரிவோரை குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

| தொழிற்பெயர் விகுதிகள் | சொல் | ஆக்கப் பெயர் விகுதிகள் |
|---|---|---|
| சி | ஆட்சி | ஆட்சியாளர் |
| அல் | செயல் | செயலாளர் |
| தி | செய்தி | செய்தியாளர் |
| மதி | இறக்கு மதி | இறக்குமதியாளர் |
| வை | பார்வை | பார்வையாளர் |
| வு | தேர்வு | தேர்வாளர் |
| பு | அழைப் பு | அழைப்பாளர் |

### 3. ஆள் என்னும் விகுதி கடைநிலை பணிபுரிவோரை குறிப்பதற்கும்,

- உதவி + ஆள் – உதவியாள்
- காப்பு + ஆள் – காப்பாள்
- மேல் + ஆள் – மேலாள்

**ஆளி என்னும் விகுதி இருபால் பொதுப் பெயர்களை உருவாக்க துணை நிற்கிறது.**

- நெசவு + ஆளி - நெசவாளி
- முதல் + ஆளி - முதலாளி
- தொழில் + ஆளி – தொழிலாளி

### 4. வினையுடன் எச்சத்துடனும் சேரும் விகுதி

வினையுடன் மானம் என்னும் விகுதி சேர்ந்து புதிய சொற்களை உருவாக்குகின்றன.

- அடை + மானம் – அடைமானம்



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- கட்டு + மானம் – கட்டுமானம்
- தேய் + மானம் – தேய்மானம்

**5. பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்**

- அச்சு + அகம் - அச்சகம் (பெயருடன் சேர்ந்து வந்தது)
- அலுவல் + அகம் - அலுவலகம் (வினையுடன் சேர்ந்து வந்தது)

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in